**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**M.C.O.P.No.318/2023**

2026ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 09 ஆம் நாள் ----என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. உதயசூரியன் (எ.ம.சா.1) | தொழில் | : சட்ட மேலாளர், ரிலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி |
| த/பெ. | : திரு. சுந்தரம் | வயது | : 38 |
| க/பெ. | : திரு. | | |
| கிராமம் | : திருச்சி | இனம் | : ஆண் |
| தாலுகா | : திருச்சி | நாள் | : 09.02.2026 |
| மாவட்டம் | : திருச்சி | | |

**முதல் விசாரணை :-**

நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ.1 | TN 94 C 7682 என்ற வாகனத்தின் காப்பீட்டு நகல் |
| எ.ம.சா.ஆ.2 | ஆயக்குடி காவல் நிலையக் குற்ற எண்.214/2023 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடம் கணினி நகல் |
| எ.ம.சா.ஆ.3 | TN 94 C 3516 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை கணினி நகல் |

மனு தள்ளுபடியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

விபத்து பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது, ஆவணங்களின் அடிப்படையில் தெரியும். TN 94 C 7686 என்ற பதிவு எண்ணுள்ள வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தில் விபத்து சமயம் காப்பீடு வழங்கப்பட்டு காப்பீடு அமலில் இருந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி பாலிசி 3-ம் நபர் பெயருக்கு இழப்பீடு

வழங்க ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். காப்பீடு ஒப்பந்தம் என்பது வாகன உரிமையாளருக்கும், காப்பீட்டு நிறுவனத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காப்பீடு 3–ம் நபரான மனுதாரரைக் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல, பாலிசி விதிமுறை மீறல் ஏற்பட்டுள்ளது. மனுதாரர் கவனக்குறைவே விபத்திற்கு காரணம். எங்கள் நிறுவனத்தின் விசாரணை அதிகாரி எங்கள் நிறுவனத்திற்கு ஆதரவாக அறிக்கை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. விபத்து சம்மந்தமாக 1–ம் எதிர்மனுதாரர் மீது ஆயக்குடி காவல் நிலையம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே காவல்துறை அதிகாரி விபத்து சம்மந்தமாக முழு விசாரணைக்குப் பின்னர் 1–ம் எதிர்மனுதாரர் ஓட்டுனர் மீது வழக்கு பதிவு செய்துள்ளார் என்றால் சரிவர விசாரிக்கப்படாமல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதுசம்மந்தமாக எங்கள் நிறுவனத்தின் சார்பில் நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு விபத்து சாலையின் மையப்பகுதியில் நடக்கவில்லை என்றும், சாலையின் ஓரத்தில் விபத்து நடந்து மனுதாரர் சாலையின் மையப்பகுதிக்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு 1–ம் எதிர்மனுதாரர் தான் முழுக்காரணம் என்றும், முதல் தகவல் அறிக்கை, குற்ற இறுதி அறிக்கை 1–ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் பெயரில் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் மனுதாரரே விபத்தை வரவழைத்துக்கொண்டார். விபத்தை நேரடியாகப் பார்த்தவர்களுக்குத் தான் தெரியும் என்றும், மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கக்கூடாது என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2026.02.09 17:22:38 +0530

Additional Sub Judge,
Palani.